திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு. தெ. பாஸ்கர பாண்டியன்., இ.ஆ.ப.,

திருவள்ளுவர் ஆண்டு 2055/
குரோதி வருடம் / ஆவணி – 19

ந.க.எண்.2154/2023/ஆ

நாள். 04.09.2024.

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – வேலூர் மண்டலம் – திருவண்ணாமலை மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்து பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண்.1901/PSD–B2/2023, நாள்.18.08.2023.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை உத்திரவுகள் ந.க.எண்.2154/2023/ஆ, நாள்.14.08.2023, 29.08.2023 மற்றும் 13.09.2023.

*********

**ஆணை**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் பணியாளர் தேர்வு செய்து பார்வை 1ல் காணும் உத்திரவின்படி திருவண்ணாமலை மாவட்ட பேரூராட்சிகள் அலகிற்கு தனியர்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளருக்கு பார்வை 2ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவின்படி, பின்வரும் பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணியிடம் வழங்கப்பட்டு, தனியர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்பட்ட பதவி மற்றும் பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கு.அண்ணாமலை | வரித்தண்டலர், வேட்டவலம் பேரூராட்சி | 30.08.2023 மு.ப. | 30.08.2023 மு.ப. |
| 2 | ச.தேவா | வரித்தண்டலர், பெரணமல்லூர் பேரூராட்சி | 25.08.2023 மு.ப. | 25.08.2023 மு.ப. |
| 3 | ம.ரஞ்சித்குமார் | இளநிலை உதவியாளர், கண்ணமங்கலம் பேரூராட்சி | 11.09.2023 மு.ப. | 11.09.2023 மு.ப. |
| 4 | ச.தினேஷ்குமார் | வரித்தண்டலர், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி | 20.09.2023 மு.ப. | 20.09.2023 மு.ப. |

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வழியாக பணி அமர்த்தப்பட்டவர்கள் பணி அமர்வு ஆணை வழங்கப்படும் பொழுது பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என அரசாணை எண்.191, பொதுத் துறை, நாள்.01.02.1962ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணையின்படி, மேற்குறிப்பிட்ட தனியர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் என்பதால் தனியர்களின் பணியினை இளநிலை உதவியாளர் /வரித்தண்டலராக பணியில் சேர்ந்த கலம் -5ல் உள்ள நாளில் முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவினை மேற்கொண்டு அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
திருவண்ணாமலை.

பெறுநர்

1. திரு.கு.அண்ணாமலை, வரித்தண்டலர், வேட்டவலம் பேரூராட்சி
2. திரு.ச.தேவா, வரித்தண்டலர், பெரணமல்லூர் பேரூராட்சி
3. திரு.ம.ரஞ்சித்குமார், இளநிலை உதவியாளர், கண்ணமங்கலம் பேரூராட்சி
4. திரு.ச.தினேஷ்குமார், வரித்தண்டலர், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி
   (செயல் அலுவலர் மூலமாக)

நகல்

1. பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை-28 அவர்களின் தகவலுக்காக
2. செயல் அலுவலர்கள், வேட்டவலம், பெரணமல்லூர், கண்ணமங்கலம் மற்றும் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்